*8*

# ஆகாபுக்குக் கடைசி வாய்ப்பு

## (1 இராஜாக்கள் 20)

*"கடைசி வாய்ப்பு!" என்று விளம்பரப்படுத்தும் அறிவிப்புகளை நீங்கள் அனேகமாகக் கண்டிருக்கலாம்: "அடுத்த ஐம்பது மைல்களுக்கு பெட்ரோல் மற்றும் உணவு கிடைப்பதற்குக் கடைசி வாய்ப்பு"; "இந்த விலையில் ஓர் டாட்ஜ் காரை வாங்க இதுவே கடைசி வாய்ப்பு"; "இந்த சர்க்கஸ் இந்த நகரைவிட்டுப் புறப்படும்முன் இதைக் காண்பதற்கு இதுவே கடைசி வாய்ப்பு"; சிலவேளைகளில் இந்த விளம்பரங்கள் உதவிகரமாக உள்ளன; சிலவேளைகளில் அவ்வாறு இருப்ப தில்லை. ஒருமுறை நான் எனது குடும்பத்துடன், பெட்ரோல் விலை வரம்புகடந்த நிலையில் இருந்த ஒரு மாநிலத்தினூடே பயணம் செய்துகொண்டிருந்தேன். பின்வரும் அறிவிப்பைப் பெரிய அளவில் கொண்டிருந்த ஒரு பெட்ரோல் நிலயத்திற்கு நாங்கள் வந்துசேர்ந்தோம்: "நாலரை லிட்டர் பெட்ரோல் 68 ரூபாய்க்கு வாங்குவதற்கு இதுவே கடைசி வாய்ப்பு!" நாங்கள், முன்னெதிர் வந்து கொண்டிருந்த விலைகள் பற்றிப் பயம் நிறைந்தவர்களாக, அங்கு நின்று எங்கள் வண்டியின் பெட்ரோல் டேங்கை நிரப்பிக் கொண்டோம். சற்றுப் பின்பு நாங்கள் எங்கள் பயணத்தை மீண்டும் தொடர்ந்து, அந்த மாநில எல்லை கோட்டைக் கடந்துபோனபோது, அடுத்த மாநிலத்தில் பெட்ரோலின் விலை மலிவாக இருந்ததைக் கண்டறிந்தோம்!*

*இருப்பினும் சிலவேளைகளில், "கடைசி வாய்ப்பு" என்ற சொற்றொடருக்குத் தனிச்சிறப்பு உள்ளது. ஆகாயவிமானங்கள் சமுத்திரத்தினூடே பறக்கும்போது, அவைகள் இடர்ப்பாடு ஏற்படும் விஷயத்தில் திரும்பி வருவதற்கான தங்களின் கடைசி வாய்ப்பான "திரும்புதல் இல்லாத இடம்" ஒன்றை அடைகின்றன. அவைகள் தங்கள் எரிபொருளில் பாதியைப் பயன்படுத்தியபின்பு, தொடருதல் என்பதே அவற்றின் ஒரே வாய்ப்பாக உள்ளது.*

*1 இராஜாக்கள் 20ம் அதிகாரம், ஆகாபுக்குக் "கடைசி வாய்ப்பைப்" பற்றிக் கூறுகிறது. குறிப்பிடத்தக்க இந்த அதிகாரத்தில் தேவன் ஆகாபுக்கு, தாமே உண்மையான தேவன் என்பதை ஒப்புக்கொள்வதற்கு வாய்ப்புக்குப் பின் வாய்ப்பாகக் கொடுத்தார். இந்த அதிகாரத்தில் எலியா தோற்றம் தருவ தில்லை. முந்திய அதிகாரத்தில் எலியா, "போதும் கர்த்தாவே" என்று கூறியிருந்தார் (1 இராஜாக்கள் 19:4). அவர் ஆகாபின் மீது நம்பிக்கையில்லாது விட்டுவிட்டார். ஆனால் தேவன் அவ்வாறு செய்யவில்லை என்பது உறுதி. அவர் ஆகாபுக்கு அதிகமான பல வாய்ப்புக்களைக் கொடுப்பார்.*

*20ம் அதிகாரத்தில் தேவன், இஸ்ரவேலுக்கு வடக்கில் இருந்த சீரியா என்ற அதன் பயங்கரமான விரோதியின் மீதான இரண்டு யுத்தங்களில் ஜெயிப்பதற்கு, ஆகாபிடத்திலும் இஸ்ரவேலிடத்திலும் கிரியை செய்தார். இதைச் செய்வதற்குத் தேவன் பல காரணங்களைக் கொண்டிருக்கலாம். ஒருவேளை அவர், மேசியா வரவிருந்த தமது உடன்படிக்கையினுடைய மக்களைப் பாதுகாக்க அக்கறை*

கொண்டிருக்கலாம். சீரியாவானது இஸ்ரவேலை அழித்துப் போட்டிருந்தது என்றால், இது யூதேயா என்ற தெற்கு இராஜ்யத்தை அபாயத்திற்கு உட்படுத்துவதாக இருந்திருக்கும். இருப்பினும் தேவனுடைய இடையீட்டிற்கு 1 இராஜாக்கள் 20ல் ஒரே ஒரு காரணம் மாத்திரம் தரப்பட்டுள்ளது. இது 13 மற்றும் 28ம் வசனங்களில் பேசப்படுகிறது:

> … அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து: அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, *நானே கர்த்தர் என்று நீ அறியும்படி* இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.
>
> அப்பொழுது தேவனுடைய மனுஷன் ஒருவன் வந்து, இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: … நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல் லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; *அதினால் நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள்* என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

தேவன், "பாகாலோ அல்லது ஆஷெராவோ கர்த்தராக இருப்பதில்லை; மாறாக *நானே* கர்த்தராக, உண்மையான தேவனாக மற்றும் ஒரே தேவனாக இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று கூறினார். ஆகாபோ அல்லது இஸ்ரவேலோ பாத்திரராக இருந்ததால் தேவன் செயல்துடிப்புடன் இருந்தார் என்பதல்ல, ஆனால் அவர் தமது வல்லமையைச் செயல்விளக்கப் படுத்துவதற்காகவே செயல்துடிப்புடன் இருந்தார். தேவன், ஆகாபும் இஸ்ரவேலும் அவரைக் கர்த்தராக ஒப்புக்கொள்வதற்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தார்.

நாம், "ஆச்சரியமான கிருபை" என்பதைப் பற்றிப் பாடல் பாடுகிறோம். இந்த அதிகாரமானது, தேவனுடைய கிருபையின் ஆச்சரியமான இயல்பைப் பற்றிய ஒரு செயல்விளக்கமாக உள்ளது. நமது தேவன் நீடியபொறுமை உள்ளவராக இருக்கிறார். பேதுரு, "… கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமா யிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டு மென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று கூறினார் (2 பேதுரு 3:9). இந்த அதிகாரம், தேவன் எவ்வளவு பொறுமையும் நீடியபொறுமையும் கொண்டுள்ளார் என்று காண்பிக்கிறது.

## ஆகாபுக்கு முதல் வாய்ப்பு (20:1-21)

1 முதல் 21 வரையுள்ள வசனங்களில் நாம், மெய்யான ஒரே தேவனை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதற்கு, இந்த அதிகாரத்தில் ஆகாபுக்குத் தரப்பட்ட முதல் வாய்ப்பைக் காண்கிறோம் (இதற்கு முன்னர் அவர் பல வாய்ப்புக்களைக் கொண்டிருந்தார்).

1 முதல் 12வரையுள்ள வசனங்கள், சீரியாவின் அரசரான பெனாதாத், இஸ்ரவேலை அழிக்க எவ்வாறெல்லாம் தயாராயிருந்தார் என்பதை விவரிக்கின்றன. "சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்[1] தன் சேனையையெல் லாம் கூட்டிக்கொண்டுபோய், … அவனோடேகூட முப்பத்திரண்டு ராஜாக்கள்[2]

இருந்ததுமல்லாமல், குதிரைகளும் இரதங்களும் இருந்தது" (வசனம் 1அ, இ). இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தம் செய்வதற்காக சீரியாவின் அரசர் முப்பத்து இரண்டு அரச குலத்தவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தார். "சமாரி யாவை முற்றிக்கைபோட்டு அதின்மேல் யுத்தம்பண்ணினான்" (வசனம் 1ஆ). சமாரியா மீதான இந்த முற்றுகை எவ்வளவு காலம் நீடித்திருந்தது என்று நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் இது, சீரியர்கள் "தற்காலிகக் கூடாரங்களைக்" கட்டவும் (வசனங்கள் 12, 16) மற்றும் ஆகாப் எந்த நிபந்தனைகளுக்கும் ஒத்துக்கொள்ளும் அளவுக்கும் போதுமான அளவுக்கு நீடியதாக இருந்தது.

இப்படிப்பட்ட முற்றுகையில் நடைபெற்றது என்ன என்பதைப் பற்றிய கருத்துக்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு, பெனாதாத்[3] மீண்டும் சமாரி யாவை முற்றுகையிட்டது பற்றிய விபரத்தைத் தருகிற 2 இராஜாக்கள் 6:24-30ஐக் கண்ணோக்குங்கள். பட்டினியிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்கு மக்கள், குறிப்பிட இயலாத விஷயங்களை உண்டனர். தாய்மார்கள் தங்கள் சொந்தப் பிள்ளைகளை உண்டனர்!

அடுத்ததாக, பெனாதாத் ஆகாபிடத்தில் செய்தியாளர்களை அனுப்பி, "உன்னுடைய வெள்ளியும் பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள்" என்று கூறச்செய்தான் (வசனங்கள் 2, 3).

பெனாதாத் இஸ்ரவேலின் மேல், ஆழ்ந்த வெறுப்பு கொண்டவனாக இருந்தி ருக்க வேண்டும். அவன் வெற்றி கொண்டதோடு மாத்திரம் திருப்தியடைய வில்லை. பலமானவன் ஒருவன் பலவீனமானவர்களை "மண்ணை உண்ணும்படி" செய்வது போன்று, பெனாதாத், ஆகாபையும் இஸ்ரவேலையும் வெட்கக் கேட்டிற்கு உள்ளாக்க விரும்பினான், அவன் "உன்னுடைய வெள்ளியையும் பொன்னையும் நான் விரும்புகிறேன்" என்று கூறினான், அவன் "உன்னுடைய மனைவிகளையும் உன்னுடைய பிள்ளைகளையும் நான் விரும்புகிறேன்" என்று கூறினான். ஒரு அரசன் தனது மனைவிகளை விட்டுக்கொடுத்தல் என்பது எதை அர்த்தப்படுத்தியது என்று நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. ஒரு அரசன் தனது அந்தப்புரத்தை ஒப்புக்கொடுத்துவிடுதல் என்பது அவன் சிங்காசனத்தை, தனது ஆண்மையை, மற்றும் தனது சுயமரியாதையை விட்டுக்கொடுத்தல் என்பதாக இருந்தது. ஒரு அரசன் தனது வீட்டாரைக் காப்பதற்காக மரிக்கவும் மனவிருப்பம் கொண்டவனாக இருக்க வேண்டும்.

அவமானப்படுத்தும் இந்த நிபந்தனைக்கு ஆகாபின் பதில் என்னவாக இருந்தது? ஆகாப், பயத்தினால் நடுக்கத்துடனும் நிலைகுலைவுடனும், "ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய வார்த்தையின்படியே, நானும் எனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள்தான்"[4] (வசனம் 4) என்று கூறி அந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டார்.[5] ஆகாபின் மனைவிகளில் யேசபேல் முதன்மையானவள் என்ற அந்தஸ்தில் இருந்தாள்! ஆகாபின் முடிவு அவளை எவ்வளவாகத் தாக்கியிருக்கும் என்றும் அவள் எவ்வளவு மகிழ்ச்சியற்றவளாக இருந்திருப்பாள் என்றும் கற்பனை செய்துபாருங்கள்!

நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன, மற்றும் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தன; அது விஷயத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும். இருப்பினும் பெனாதாத், ஆகாபைச் சங்கடப்படுத்தும் தனது முயற்சியை இன்னும் முழுமையாகச் செய்திருக்கவில்லை. அவன், ஆகாப்

போதுமான அளவுக்குப் புழுதியை உண்டிருக்கவில்லை என்று முடிவு செய்தான். நிபந்தனைகளை அவன் மறுபடியும் திருத்தினான்:

> அந்த ஸ்தானாபதிகள் திரும்பவும் வந்து: பெனாதாத் சொல்லுகிறது என்னவென்றால், உன் வெள்ளியையும், உன் பொன்னையும், உன் ஸ்திரீகளையும், உன் குமாரர்களையும் நீ எனக்குக் கொடுக்கவேண்டும் என்று உமக்குச் சொல்லியனுப்பினேனே. ஆனாலும் நாளை இந்நேரத்தில் என் ஊழியக்காரரை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவர்கள் உன் வீட்டையும் உன் ஊழியக்காரரின் வீடுகளையும் சோதித்து, உன் கண்ணுக்குப் பிரியமானவைகள் எல்லாவற்றையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டுபோவார்கள் என்றார் என்று சொன்னார்கள் (வசனங்கள் 5, 6).

செயல்விளைவில் பெனாதாத், "நான் கேட்பதை நீ அனுப்புவாய் என்று உன்மேல் நான் நம்பிக்கை கொள்ளவில்லை, எனவே நான் எனது வேலைக்காரர்களை அனுப்புவேன். அவர்கள் இராஜ பொக்கிஷத்தில் இருந்து வெள்ளியையும் பொன்னையும் எடுப்பது மாத்திரமின்றி, அவர்கள் நகரத்தின் ஒவ்வொரு இல்லத்தையும் ஆராய்ந்து, அவர்கள் விரும்புகிற யாவற்றையும் எடுத்துக்கொள்வார்கள்!" என்று கூறினான். முழு நகரமும் கொள்ளையிடப்படும்.

ஆகாப் பெனாதாத்துக்குச் சம்மதித்து நின்றாரா? உண்மையில் இல்லை. அதற்குப் பதிலாக அவர் தமது ஆலோசகர்களை அழைத்து அவர்களின் தோள்களில் (சாய்ந்து) கதறினார்:

> அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, தேசத்தின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து: இவன் பொல்லாப்புத் தேடுகிற விதத்தைக் கவனித்துக் பாருங்கள்; என் ஸ்திரீகளையும், என் குமாரர்களையும், என் வெள்ளியையும், என் பொன்னையும் கேட்க, இவன் என்னிடத்தில் ஆள் அனுப்பினபோது, நான் கொடுக்கமாட்டேன் என்று இவனுக்கு மறுக்கவில்லையே என்றான் (வசனம் 7).

ஆகாப் தமது வெட்கத்தை அறிவித்து, அவர் தமது பிள்ளைகளையும் வைப்பாட்டிகளையும் போராட்டம் எதுவுமின்றி சரணடையச் செய்யச் சம்மதித்ததை ஒப்புக்கொண்டார். "நான் இப்போது என்ன செய்வது?" என்பதே அவரது கதறுதலின் மறைமுக உணர்த்துதலாக இருந்தது. அங்கு கூடியிருந்த மூப்பர்களும் மற்றவர்களும் கொஞ்சம் தைரியத்தைக் காண்பித்தனர். அவர்கள், "நீர் அவனுக்குச் செவிகொடுக்கவும், அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாம்" என்று பதில் அளித்தனர் (வசனம் 8). ஆகாப் பெனாதாத்துக்கு ஒரு மறுப்பை அனுப்பினார் (வசனம் 9).

பெனாதாத் மிகவும் கோபம் கொண்டான். அவன், இஸ்ரவேல் மக்களின் இருதயங்களைப் பயத்தினால் தாக்கும்படி வார்த்தை வெடிகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு செய்தியை அனுப்பினான்: "எனக்குப் பின் செல்லுகிற ஜனங்கள் எல்லாரும் கைக்கு ஒரு பிடியாவது வாரிக்கொள்ள சமாரியாவின்

*தூள் போதுமானதாயிருந்தால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிக மாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" (வசனம் 10). "நான் நகரத்தை அப்படியே விட்டுவிடப் போகவிருந்தேன், ஆனால் இப்போது இல்லை. நான் சமாரியாவைத் தூள்தூளாக்குவேன், பின்பு எனது போர்வீரர்கள் அதன் தூளை எடுத்துச் செல் வார்கள்! ஒன்றும் விடப்படாது!"[6] என்று அவன் கூறினார்.*

*ஆகாப் தமது சொந்தப் பழமொழியைக் கொண்டு பதில் உரைத்தார்: "ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாது என்று அவனுக்குச் சொல்லுங்கள்" (வசனம் 11).[7] ஆகாப், "யுத்தத்திற்கு முன்பு அல்ல பின்பு என்பதுதான் பெருமை பாராட்டும் நேரமாகும் - எனவே நீ மிகவும் மேட்டிமையாகப் பேசுவதற்கு முன்னர், அந்த யுத்தம் முடிந்து நீ உனது ஆயுதங்களை அகற்றிப்போடும்வரையில் காத்திரு" என்று கூறினார். இது "குஞ்சுகள் பொரிப்பதற்கு முன்னர் அவற்றை எண்ணாதே" என்ற பழமொழியின் அர்த்தம் போன்றதாக உள்ளது.[8] (பெனாதாத்தும் ஆகாபும், ஒருவருக்கொருவர் வசவுகூறும் சிறுபிள்ளைகளைப் போலிருந்தனர்: "உனது பாட்டி இராணுவக் காலணிகளை அணிந்திருக்கிறார்!"; "உனது தாத்தா போர்வைக்கு வெளியே கால்களை வைத்துத் தூங்குகிறார்!")*

> பெனாதாத்தும், மற்ற ராஜாக்களும் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருக்கையில்,[9] இந்த வார்த்தையைக் கேட்டு, தன் ஊழியக்காரரை நோக்கி: ஆயத்தம்பண்ணுங்கள் என்றான்; அப்படியே நகரத்தின்மேல் சண்டைசெய்ய ஆயத்தம்பண்ணினார்கள் (வசனம் 12).

*இந்தத் தருணத்தில் தேவன் இடையிட்டு ஆகாபுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தார். "அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து" (வசனம் 13அ). இந்தத் தீர்க்கதரிசி யார்? நமக்குத் தெரிய வில்லை. இந்த அதிகாரத்தில் நான்குமுறை தீர்க்கதரிசி அரசரிடம் வருதலைப் பற்றி வாசிக்கிறோம் (வசனங்கள் 13, 22, 28, 35). தேவனுடைய செய்தி யாளரை விவரிக்கக் குறைந்தபட்சம் மூன்று வித்தியாசமான சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஒரு வேளை இது குறைந்தபட்சம் மூன்று வெவ்வேறு தீர்க்கதரிசிகள் இந்த அதிகாரத்தில் ஆகாபுடன் பேசுவதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்டனர் என்று சுட்டிக்காண்பிக்கலாம். அப்படியென்றால், அவர்கள் எங்கிருந்து வந்தனர்? முந்திய இரண்டு அதிகாரங்களில், எலியா தாம் தனியாக நின்றிருந்ததை வலியுறுத்தினார் (1 இராஜாக்கள் 18:22; 19:10, 14). ஒருவேளை, கர்மேல் மலையின்மீது எலியாவின் தைரியமான நிலைநிற்குதல் மற்ற தீர்க்கதரிசிகளுக்கு உற்சாகத்தை அளித்திருக்கலாம் - ஒருவேளை, ஒளிந் திருந்த மற்றவர்கள் இப்போது நாட்டில் பொல்லாங்கிற்கு எதிராக நிற்க மனவிருப்பம் பெற்று இருக்கலாம். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், எலியா தாம் விரும்பியபிரகாரம் தேவனிடம் நாட்டைத் திருப்பாது இருக்கலாம், ஆனால் அவரது செயல்கள் மற்றவர்களை ஊக்கப்படுத்தியிருந்தால், அவர் சிலவற்றை நிறைவேற்றியிருந்தார்!*

*நாம் விரும்பியவற்றை நிறைவேற்றாது இருப்பதால் நாம் அடிக்கடி ஊக்கம் இழந்தவர்கள் ஆகிறோம். நாம் கர்த்தருடைய சித்தத்தைச் செய்துகொண்டிருந்தால், விரும்பிய விளைவுகளைப் பெறாதிருத்தல் என்பது*

நாம் ஒன்றும் நிறைவேற்றவில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளுவது அவசியமாக உள்ளது. நமது முயற்சிகளில் இருந்து தேவனால் நல்லவற்றை ஏற்படுத்த முடியும்.

ஆகாபை அணுகிய தீர்க்கதரிசி, "அந்த ஏராளமான ஜனக்கூட்டத்யையெல் லாம் கண்டாயா?'' என்று கூறினார் (வசனம் 13அ). இந்தக் கேள்வியில் வஞ்சப்புகழ்ச்சிமிக்க நகைச்சுவை காணப்பட முடியும். இவற்றை ஆகாப் எவ்வாறு காணத்தவறியிருக்கக் கூடும்? அவர் கண்ணோக்கிய திசை யாவற்றிலும், அவர் காணமுடிந்த அளவுக்கு அனேகமாக அந்த சேனைகள் பரந்து விரிந் திருக்கக்கூடும்! பின்பு தேவனுடைய செய்தியானது அவரது நோக்கத்தை விளக்கப்படுத்தியது: "இதோ, நானே கர்த்தர் என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் 13ஆ). பாகால் அவர்களைப் பாதுகாக்கத் தவறியிருந்தான். இந்த முற்றுகை தொடங்கியதில் இருந்து பாகாலுக்கும் ஆசெராவுக்கும் அளிக்கப் பட்டிருந்த ஆயிரக்கணக்கான பலிகளைக் கற்பனை செய்து பாருங்கள்! இந்த பலிகள் உதவி செய்திருக்கவில்லை; பெரும்வருத்தம் ஏற்பட்டிருந்தது. தேவன், "பின்னிட்டு நில்லுங்கள் மற்றும் நான் என்ன செய்ய முடியும் என்பதை உங்களுக்குக் காண்பிக்க அனுமதியுங்கள். உண்மையிலேயே கர்த்தர் யாரென்று நீங்கள் அறிவீர்கள்!" என்று கூறினார்.

ஆகாப், ''யாரைக்கொண்டு?'' என்று கேட்டார் (வசனம் 14அ). "யாரைக்கொண்டு எங்களை நீர் விடுவிப்பீர்?" ஆகாப், "நீர் அந்த இராணுவத்தை வெளியேற்ற இயலுமா? நீர் சுடரொளிப் பட்டயங்களுடன் தூதர்களின் சேனையை அனுப்புவீரா? நகரத்தைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் பலத்த இராணுவத்தை அடக்குவதற்குப் போதுமான வல்லமைநிறைந்த சாத்தியமுள்ள எந்தப் படையை நீர் அனுப்ப முடியும்?" என்று வியப்படைந்தார்.

தீர்க்கதரிசி கர்த்தருடைய பதிலைக் கொடுத்தார்: "மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக்கொண்டு'' (வசனம் 14ஆ). இவர்கள் அனேக மாக, இஸ்ரவேலின் பல்வேறு மாகாணங்களின் ஆட்சியாளர்களின்கீழ் இருந்த இளைஞர்களாக இருந்திருப்பார்கள் - இவர்கள் யுத்தத்திற்குப் பழக்கப்பட்ட, போட்டிகளில் தீட்டப்பட்ட திறமைகள் கொண்டவர்கள் அல்ல, ஆனால் வீட்டு வேலைக்காரர்களாக இருந்தனர். அடுத்த வசனமானது, இந்த இளைஞர்கள் 232 பேர் என்று குறிப்பிடுகிறது. ஒரு வெற்றியை ஜெயிப்பதற்குத் தேவனுக்கு ஏராள மான எண்ணிக்கையில் ஆட்கள் தேவைப்படுவதில்லை. கிதியோனிடத்தில் தேவன் வலியுறுத்தியிருந்தது போன்று, யுத்தமானது மனிதர்களின் திறமை யினால் அல்ல ஆனால் தமது சுய வல்லமையினாலேயே ஜெயிக்கப்படுகிறது என்பதை ஆகாப் அறிய வேண்டும் என்று தேவன் விரும்பினார் (காண்க - நியா யாதிபதிகள் 7:2; 1 கொரிந்தியர் 1:27, 29).

பின்பு ஆகாப், "யுத்தத்தை யார் துவக்கவேண்டும்" என்று கேட்டார் (வசனம் 14இ). "தொடக்க முயற்சி மேற்கொள்வது யார்?" ஆகாப் திகைப்படையும்படி தேவனுடைய மனிதர், "நீர்தான்" என்று பதில் உரைத்தார் (வசனம் 14ஈ)!

232 இளைஞர்களைத் தொடர்ந்து 7,000பேர் கொண்ட ஒரு சிறு படையானது பின்செல்ல வேண்டியதாக இருந்தது (வசனம் 15). இந்த ஏழாயிரம் பேர், பாகாலுக்கு மண்டியிடாத அதே ஏழாயிரம் பேர்களா (1 இராஜாக்கள் 19:18)? ஒருவேளை அவ்வாறு இருக்கலாம், ஆனால் நமக்குச் சரியாகத் தெரிய

வில்லை.

எல்லாம் தயாரானபோது, 232 வேலைக்காரர்களும் சமாரியா நகரத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றனர். அதைப்போன்ற போர்ச்சேவகர்களின் பட்டாளம் அனேகமாக ஒருக்காலும் இருந்திராது.

> அவர்கள் மத்தியான வேளையிலே (இது உண்பதற்கும் ஓய்வெடுப்பதற்குமான வழக்கமான வேளையாகும்) புறப்பட்டுச் சென்றனர்,[10] அதே வேளையில் பெனாதாத் தனக்கு உதவிய முப்பத்து இரண்டு அரசர்களுடன் கூடாரங்களில் குடித்துக்கொண்டிருந்தான், அவன் தானே குடிபோதையில் இருந்தான்.[11] மாகாணங்களின் அதிபதிகளினுடைய இளைஞர்கள் முதலில் சென்றனர் (வசனங்கள் 16, 17அ).

ஒரு சிறு படையானது பெனாதாத்தின் முகாமை நெருங்கி வந்துகொண்டிருந்தது என்ற வார்த்தை பெனாதாத்துக்கு வந்து சேர்ந்தது. "பெனாதாத் மனுஷரை அனுப்பினான்" (வசனம் 17ஆ, RSV). வீரர்கள் அறிக்கையுடன் திரும்பி வந்தனர்: "சமாரியாவிலிருந்து மனுஷர் புறப்பட்டு வருகிறார்கள்" (வசனம் 17இ). குடித்துவெறித்திருந்த பெனாதாத், "அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டு வந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்" என்று கட்டளையிட்டான் (வசனம் 18).

அவர்களைப் பெனாதாத் உயிரோடு பிடிக்க விரும்பியது ஏன்? ஒருவேளை அவன், அவர்களைத் தானே பார்த்து சித்திரவதை செய்ய விரும்பியிருக்கலாம். அவனது காரணம் என்னவாக இருந்தாலும், அவனது கட்டளைகள் பண்பற்றதாகவும் மதியீனமானதாகவும் இருந்தன. மனிதர்கள் சமாதானத் திற்காக வந்தால், அவர்கள் கைதிகளாக அல்ல, ஆனால் தூதர்களாக நடத்தப்பட வேண்டும் என்பதால் அவைகள் (அவனது கட்டளைகள்) பண்பற்றவையாக இருந்தன. மனிதர்கள் யுத்தத்திற்காக வந்தால், பெனாதாத் தனது போர்வீரர்கள்மீது சாத்தியமற்ற ஒரு சூழ்நிலையைச் சுமத்தினான் என்பதால் அவைகள் (அவனது கட்டளைகள்) மதியீனமானவையாக இருந்தன. கட்டளை கொடுக்கப்பட்டபின்னர், மரண அச்சுறுத்துதலினால் அவர்களில் ஒருவனும் அதை மீறத் துணியவில்லை. அந்த இளைஞர்களை அவர்கள் எவ்வாறு உயிரோடே பிடிக்க முடியும்? அவர்களைக் கொன்று விடுவோமோ என்று அஞ்சியதால் அவர்கள்மீது அம்புகளை எய்ய முடியவில்லை. அவர்கள் தங்கள் ஈட்டிகளை எறியவோ தங்கள் பட்டயங்களை வீசவோ அல்லது தங்கள் கத்திகளை உறையை விட்டு வெளியே எடுக்கவோ முடியாதிருந்தது. அவர்கள் கடுமையான ஒரு அடிகொடுத்து அது மரணத்திற்குக் காரணமாகிவிடுமோ என்ற பயத்தினால், அந்த இளைஞர்களை அதிர்ச்சியூட்ட முயற்சி செய்யவும் முடியாதிருந்தது. அந்த மனிதர்களுக்குக் கட்டளை இட்டு, தங்கள் எண்ணிக்கையின் வல்லமையால் மாத்திரம் அவர்களை மேற்கொண்டு, தங்களை அந்த மனிதர்களின் அடிவீச்சுக்களின் இரக்கத்திற்கு விட்டுவிடுதல் என்பதை மாத்திரமே அவர்களை வெற்றிகொள்ள நம்புதல் என்பதே அவர்களின் ஒரே தெரிவாக இருந்தது. (எனது விரோதிகள் என்னைத் துன்புறுத்தக் கூடாது என்ற கட்டளையின்கீழ் இருந்தால், நான் கூட யுத்தத்தில் வெற்றி கொள்ளமுடியும்!)

20ம் வசனம் விளைவைக் கூறுகிறது: “அவர்கள் [இஸ்ரவேல் மக்கள்] அவரவர் தங்களுக்கு எதிர்ப்படுகிறவர்களை வெட்டினார்கள்.”[12] 7,000 பேர்களைக் கொண்ட படையானது அவர்களைப் பின் தொடர்ந்து யுத்தத்தில் மேற்கொண்டது (வசனம் 19). விரைவிலேயே ஒரு கலகம் ஏற்பட்டது: “சீரியர் முறிந்தோடிப்போனார்கள்; இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தினார்கள்; சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், குதிரையின்மேல் ஏறிச் சில குதிரை வீரரோடுங்கூடத் தப்பியோடிப்போனான்”[13] (வசனம் 20ஆ).

இந்த வேளை முழுவதிலும் ஆகாப் எங்கிருந்தார்? நகரத்திற்குள் பாதுகாப்பாக இருந்தார்! இப்போது அவர் வெளியே வந்து முடிவுகட்டும் செயல்பாட்டில் இறங்கினார்! “இஸ்ரவேலின் ராஜா புறப்பட்டு, குதிரை களையும் இரதங்களையும் முறிய அடித்து, சீரியரில் மகா சங்காரம் உண்டாக வெட்டினான்” (வசனம் 21).

அது தேவன் கூறியிருந்தபடியே நடக்க வந்தது! சூழ்நிலையானது நம்பிக்கையற்றதாகக் காணப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் அந்த நாளில் - 232 இளைஞர்களைப் பயன்படுத்திய யெகோவாவின் கரங்களில் இருந்து பிரம்மாண் சமான வெற்றியில், தங்களின் எதிரிகளிடத்தில் இருந்து விடுவிக்கப்பட்டனர்! அடுத்த வசனம் பின்வருமாறு வாசிக்கப்படுதலை நாம் எதிர்பார்ப்போம்: “ஆகாப் சமாரியா நகருக்கு வந்து யெகோவாவே கர்த்தர் என்று அறிக்கையிட்டு, நாட்டளவிலான மனஸ்தாபத்தின் செயல்விளக்கத்தில் மக்களை வழிநடத்தினார்.” அப்படிப்பட்ட வசனம் எதுவும் இல்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது. நாம் கூற முடிந்த அளவுக்கு, அந்த வெற்றியானது ஆகாபின் இருதயத்தில் எந்தச் செயல்விளைவும் கொண்டிருக்கவில்லை.

ஒரு வாய்ப்பு கடந்து சென்றிருந்தது. இன்னும் இரு வாய்ப்புகள் மாத்திரம் எஞ்சியிருந்தன.

## ஆகாபுக்கு இரண்டாவது வாய்ப்பு (20:22-30)

நம்ப இயலாத அந்த வெற்றியை, இஸ்ரவேல் மக்கள் கொண்டிருக்கையிலேயே கூட, அடுத்த ஆண்டில் சீரியர்கள் திரும்ப வருவார்கள் என்று தீர்க்கதரிசி[14] எச்சரித்தார் (வசனம் 22). “கவனித்துப்பாரும்” (“தயாராக இரும்”[15]) என்பது அவரது அறிவுரையாக இருந்தது.

கசப்பு நிறைந்த பெனாதாத்தும் அவனது ஆலோசகர்களும், அடுத்த முறை தாங்கள் எவ்வாறு இஸ்ரவேலைத் தோல்வியடையச் செய்யமுடியும் என்று ஏற்கனவே கலந்துரையாடிக் கொண்டிருந்தனர் என்பது நிச்சயம்.

> சீரியாவின் ராஜாவுடைய ஊழியக்காரர் அவனைப் பார்த்து: அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற் கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியில் யுத்தம்பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்ளுவது நிச்சயம். … இந்த ராஜாக்கள் ஒவ்வொருவரையும் தங்கள் ஸ்தலத்திலிருந்து மாற்றி, அவர்களுக்குப் பதிலாக சேனாபதிகளை ஏற்படுத்தி, நீர் ம டியக்கொடுத்த சேனைக்குச் சரியாகச் சேனையையும், அந்தக் குதிரைகளுக்குச் சரியாய் குதிரைகளையும், இரதங்களுக்குச் சரியாய் இரதங்களையும் இலக்கம்பார்த்துக்கொள்ளும்;

> பிற்பாடு சமபூமியிலே நாம் அவர்களோடு யுத்தம்பண்ணி, நிச்சயமாய் அவர்களை மேற்கொள்வோம் என்றார்கள்; அவன் அவர்கள் சொற்கேட்டு அப்படியே செய்தான் (வசனங்கள் 23, 25).[16]

பெனாதாத்தின் ஆலோசகர்கள், "நிச்சயமாய் அவர்களை மேற்கொள்வோம்" என்று அவனிடம் கூறினர் (வசனம் 25, LB).

இந்த அறிவுரை தரப்பட்டதற்கு இறையியல் ரீதியான காரணம் ஒன்றிருந்தது, மற்றும் இது நடைமுறைக்கு உகந்ததாகக் காணப்பட்டது. புறதெய்வ வழிபாட்டுக் கடவுள்கள் எல்லைத் தெய்வங்களாகக் கருதப்பட்டன. இஸ்ரவேலின் தலைநகரான சமாரியா ஒரு மலையின்மீது கட்டப்பட்டிருந்தது; சீரியாவின் தலைநகரான தமஸ்கு, சமவெளியில் அமைந்திருந்தது. சீரியர்கள், தங்கள் தெய்வங்கள் சமவெளியின் தெய்வங்கள் என்றும் இஸ்ரவேலின் தெய்வங்கள் மலைகளின் தெய்வங்கள் என்றும் நினைத்தது இயல்பானதாகவே இருந்திருக்கும். அனேகமாக, சூழ்ச்சிக்கார ஆலோசகர்கள், தங்களின் அறிவுரைக்கு நடைமுறைக் காரணம் ஒன்றையும் கொண்டிருந்திருக்கலாம்: சீரியாவின் படைகளின் முக்கியமான பாகமாக இருந்த சீரியாவின் இரதங்கள், சமதரையில் நன்கு செயல்படுபவைகளாக இருக்கையில், இஸ்ரேவேல் மக்கள் மலைநாட்டில் கொரில்லா வகையிலான யுத்தத்தில் நன்கு பழகியிருந்தனர் என்பதால், வெட்டவெளியில் யுத்தம் செய்தல் என்பது ஒரு அனுகூலமற்ற விஷயமாக இருந்திருக்க வேண்டும்.

ஒரு ஆண்டிற்குப் பின்பு பெனாதாத் மீண்டும் தனது படைகளை இஸ்ரவேலுக்குள் வழிநடத்திக் கொண்டுவந்தான். அவனது படைகள், சமதரையான வெட்ட வெளியில் நின்றனர் (வசனம் 26).[17] ஆகாப் தனது படைகளை விரைவில் ஒன்றுகூட்டி, சீரியர்களைச் சந்திக்கும்படி அவற்றை வழிநடத்தினார்; "இஸ்ரவேல் புத்திரரும் ... அவர்களுக்கு எதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போலப் பாளயமிறங்கினார்கள்; தேசம் சீரியரால் நிறைந்திருந்தது" (வசனம் 27). மீண்டும் ஒருமுறை அது வெற்றியில்லாத சூழ்நிலையைப்போலக் காணப்பட்டது. மீண்டும் ஒருமுறை தேவன் இடையிட்டார்.

> அப்பொழுது தேவனுடைய மனுஷன்[18] ஒருவன் வந்து, இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர் சொல்லியிருக்கிறபடியினால், நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; அதினால் நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (வசனம் 28).

தேவன், தமது மக்கள் உயிர்பிழைத்திருத்தல் பற்றி மாத்திரம் அக்கறையாக இருக்கவில்லை; அவரது *கனம்* இடர்ப்பாட்டில் இருந்தது. அவர் ஒரு மாகாணத்தின் தேவனாக இருப்பதாகச் சீரியர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். அவர், தாம் ஒரு உண்மையான தேவன் என்ற வகையில் மாத்திரமின்றி, தாம் இந்த அண்டத்தின் தேவன் என்ற வகையிலும் தமது வல்லமையைக் காண்பிப்பார்! தேவனுடைய சர்வவல்லமை மற்றும் அவரது எங்கும் நிறைந்த தன்மை ஆகியவை பற்றிய

அவரது செயல்விளக்கம், அவரை ஒப்புக்கொள்வதற்கு ஆகாபுக்கு இரண்டாவது வாய்ப்பை தரும்.

நமது வேதவசனப் பகுதியில் தரப்பட்டுள்ள சேனைகளின் எண்ணிக்கையானது, யுத்தம் தேவனுடைய வல்லமையினால் மாத்திரமே வெற்றிகொள்ளப்படும் என்பதை மறுபடியும் வலியுறுத்துவதற்காகவே தரப்பட்டுள்ளது. "ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது" (பிரசங்கி 9:11). மாறாக "யுத்தம் கர்த்தருடையது" (1 சாமுவேல் 17:47). சங்கீதம் 24:8ன் சத்தியம் செயல்விளக்கப் படுத்தப்படும்: "அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே."

20ம் அதிகாரத்தின் அடுத்த ஒருசில வசனங்கள், சீரியர்கள்மீது இஸ்ரவேலின் மாபெரும் வெற்றியைப் பற்றிக் கூறுகிறது. ஒரே நாளில், கைப்பிடி அளவான இஸ்ரவேல் மக்கள் சீரியர்களின் 100,000 காலாட்படை வீரர்களைக் கொன்றனர் (வசனம் 29). சீரியர்களில் எஞ்சியிருந்தவர்கள் அருகில் இருந்த நகருக்குத் தப்பி ஓடினர், அந்த நகரத்தின் சுவரானது அவர்களில் 27,000 பேர்களின்மீது விழுந்தது, அது அவர்களில் பலரைக் கொன்றும் காயப்படுத்தியும்[19] இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கைப்பற்றப்பட்ட நகரில் ஒரு சிறு அறையில் பெனாதாத் நடுங்கியபடி பதுங்கினான் (வசனம் 30). தேவன் எதிரிகளை ஆகாபின் கையில் ஒப்படைத்தார்!

தேவனுடைய கரத்தினால் இன்னுமொரு மிகையான வெற்றி கொண்டுவரப்பட்டது! மீண்டும் நாம், பின்வருமாறு வாசிப்பதை எதிர் பார்ப்போம்: "சாத்தியமற்ற சூழ்நிலையில் சீரியர்கள் மீது பெற்ற இரண்டு வெற்றிகளினால் மனம் ஈர்க்கப்பட்ட ஆகாப், தமது தலையைத் தாழ்த்தி, யெகோவாவே உண்மையான உயிருள்ள தேவன் என்று ஒப்புக்கொண்டார்." இருப்பினும் அப்படிப்பட்ட வசனம் எதுவும் இல்லை.

மனிதர்களின் வாழ்வில் தேவன் எவ்வாறு கிரியை செய்ய முடியும் என்பதும் மனிதர்கள் இன்னும் தேவனைப் புறக்கணிக்கின்றனர் என்பதும் திகைப்புக்குரியதாக இருப்பதில்லையா? இரண்டாவது வாய்ப்பு கடந்து சென்றது. இன்னும் ஒரு வாய்ப்பு மாத்திரமே மீதியிருந்தது.

## ஆகாபுக்குக் கடைசி வாய்ப்பு (20:30-43)

தேவன் மிகவும் இரக்கம் உள்ளவராக இருக்கிறார்! அவர் ஆகாபுக்கு இன்னும் ஒரு வாய்ப்பை கொடுத்தார்.

பெனாதாத் கோழைத்தனமாகத் தனது ஒளிப்பிடத்தில் பதுங்கியிருக்கையில், அவனது ஆலோசகர்கள் ஒரு வியூகத்தைக் கருத்தாகத் தெரிவித்தனர்:

> அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: "இதோ, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்கள் தயவுள்ள ராஜாக்கள் என்று கேட்டிருக்கிறோம்; நாங்கள் இரட்டுகளை எங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளை எங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் போவோம்; ஒருவேளை உம்மை உயிரோடே வைப்பார்" என்று சொல்லி (வசனம் 31).

இரட்டுகள் என்பது துக்கத்தையும் மனவருத்தத்தையும் குறித்தது, ஆனால்

*நாம் தலைகளில் இருந்த கயிறுகளைப் பற்றியும் யூகம் செய்தாக வேண்டும். ஒருவேளை அவர்கள் ஆகாபின் முன்னிலையில், தங்கள் கழுத்துக்களைச் சுற்றிச் சுருக்குக் கயிறுகளுடன் சென்று,[20] செயல்விளைவில், "நாங்கள் உமது இரக்கத்தை எதிர்பார்த்திருக்கிறோம். நீர் உமது மனவிருப்பப்படி செய்வதற்கு நாங்கள் உமது கரங்களில் இருக்கிறோம், நீர் எங்களைக் கொல்லலாம் அல்லது எங்களை உயிருடன் விடலாம்" என்று கூறத் திட்டமிட்டு இருக்கலாம்.*

*இந்த வேலைக்காரர்கள் கூறியதைப் பெனாதாத் கவனித்தது ஏன் என்பதுபற்றி எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. அனேகமாக இதே ஆலோசகர்கள், "சம வெளியில் நாம் யுத்தம் செய்தால் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகம் இல்லை"! என்று கூறியவர்களாக இருக்கலாம். இருந்தபோதிலும் அவன் அவர்கள் கூறியதைக் கேட்டான். முதலில் அவன் தனது வேலைக்காரர்களை, இரட்டு உடுத்தி, தங்கள் தலைகளில் கயிறுகளைக் கட்டியவர்களாக ஆகாபிடத்தில் அனுப்பினான். அவர்கள் அரசரிடத்தில், "என்னை உயிரோடே வையும் என்று உமது அடியானாகிய பெனாதாத் விண்ணப்பம்பண்ணுகிறான்" என்று கூறினர் (வசனம் 32அ). இந்த இராஜா, "அவனைத் தூளாக்குவேன்" என்று கூறியதில் இருந்து "தயவுசெய்து என்னை வாழவிடும்"! என்று கூறுவதற்கு ஏற்படுத்திய தொனிமாறுதல்தான் எப்படியிருந்தது!*

*கொலையில் பெனாதாத் உயிர்பிழைத்திருந்தான் என்று கேள்விப்பட்ட ஆகாப் திகைத்தார். அவர் "இன்னும் அவன் உயிரோடே இருக்கிறானா?" என்று கேட்டார் (வசனம் 32ஆ). பின்பு இஸ்ரவேல் அரசரிடத்தில் இருந்து பின்வரும் திகைப்புக்குரிய கூற்று வந்தது: "அவன் என் சகோதரன்" (வசனம் 32இ). பெனாதாத் இஸ்ரவேலை வெறுத்த மனிதனாக இருந்தான், அதன் தலை நகரத்தை அவன் தூளாக்குவதாக அச்சுறுத்தியிருந்தான், அவன் இஸ்ரவேலை அழிப்பதற்கென்றே திரும்பி வந்தவனாக இருந்தான் - இருப்பினும் அவனை "என் சகோதரன்" என்று ஆகாப் அழைத்தார்!*

*பெனாதாத்தை ஆகாப் தமது சகோதரன் என்று அழைத்தது ஏன் என்று நாம் அறிவதில்லை. 34ம் வசனம், ஆகாபின் தகப்பனும் பெனாதாத்தின் தகப்பனும் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர் மற்றும் இதையே ஆகாப் குறிப்பிட்டார் என்று சுட்டிக் காண்பிக்கலாம். ஒருவேளை பெனாதாத் வலுவான தோல்வியடையச் செய்திருந்தாலும், ஆகாப் இன்னமும் அவன்மீது பயம் கொண்டவனாக இருந்தார் மற்றும் அவர் பெனாதாத்தின் நல்மனதை ஆதாயப்படுத்த விரும்பினார். ஆகாப் தனது சுயநலமான அனுகூலத் திற்காகச் சூழ்நிலையைத் தந்திரமான சூழ்ச்சியில் திருப்ப விளையாண்டார் என்று எனது நண்பர்களில் ஒருவர்[21] நினைக்கிறார். ஆகாபின் காரணம் எதுவாக இருந்தாலும், அவரது கூற்றானது, நிதிநிலை சார்ந்த வகையிலும் ஆவிக்குரிய வகையிலும் மதியீனமானதாக இருந்தது. காஃப்மேன் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இங்கு ஆகாப், வெற்றியாளருக்குச் சொந்தமாகியிருக்கக் கூடிய கொள்ளையிலிருந்து வெளியே தம்மைச் 'சகோதரராக்கி'க் கொண்டார்; மற்றும் அவர் தமது சொந்த வாழ்வில் இருந்து வெளியே தம்மையே கூட 'சகோதரராக்கி' இருந்தார் என்று தீர்க்கதரிசி விரைவில் அவருக்குக் கூறுவார்."[22]*

*சகிப்புத்தன்மையின் இந்த நாளில், ஆகாபின் கூற்றானது மிகவும் பாராட்டக்கூடியதாக ஒலிக்கிறது, ஆனால் தேவனுடைய மக்களை அழிக்க வன்மையான நோக்கங்கொண்டிருந்த ஒரு மனிதனை "சகோதரன்" என்று*

ஏற்றுக்கொள்ளுதல் மிகவும் மதியீனமானதாக இருந்தது.

பெனாதாத்தின் மனிதர்களுடைய காதுகள் ''சகோதரன்'' என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டு அதன்மீது துள்ளிக் குதித்தன. "உமது சகோதரனாகிய பெனாதாத்" என்று எதிரொலித்து, தங்கள் தலைகளைத் தீவிர மாக அசைத்தனர் (வசனம் 33அ). தயவு மற்றும் உயர்வான கனம் ஆகியவற்றின் அடையாளமாக, ஆகாப் பெனாதாத்தைக் கொண்டுவருவதற்கு ஒரு இரதத்தை அனுப்பினான் (வசனம் 33ஆ). அந்த மனிதனை வசதிப்படுத்துவதற்கு ஆகாப் தமது வழியை விட்டு வெளியே சென்றார். அது ஆகாபுக்குப் பதிலாகப் பெனாதாத்தே அந்த யுத்தத்தில் வெற்றிபெற்றது போலிருந்தது.

எப்படியும் பெனாதாத், இஸ்ரவேலுக்குரிய பல நகரங்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் பற்றியும்,[23] ஆகாபைத் தமஸ்குவில் சிறு வர்த்தகத்தைக் கட்டியெழுப்ப அனுமதித்தல் பற்றியும்[24] அர்த்த மற்ற சில வாக்குத்தத்தங்களை ஆகாபுக்குச் செய்துகொடுத்தான் (வசனம் 34அ). அது நிபந்தனையற்ற சரணடைதல் என்பதைக் காட்டிலும் வர்த்தக உடன்படிக்கைபோலவே அதிகமாக ஒலித்தது!

பெனாதாத்தினால் தூக்கிவீசப்பட்ட துணுக்குகளில் ஆகாப் மெய்சிலிர்த்துப் போனார். அவற்றை அவர் ஏற்றுக்கொண்டு, சீரிய இராஜாவுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, அவனை வீட்டுக்குப் போக அனுமதித்தார் (வசனம் 34ஆ). ஆகாபின் சேனையானது ஆயிரக்கணக்கில் வெறிநாய்களைக் கொன்றபின்பு, அந்தக் கூட்டத்தின் தலைவனைச் சுயாதீனமாகச் செல்லும்படி - மீண்டும் வேட்டையாடிக் கொல்வதற்குச் சுயாதீனமாகச் செல்லும்படி - ஆகாப் அனுமதித்தார்![25]

இந்த அதிகாரத்தில் ஆகாப் ஒரு நல்லவனாகக் காட்டப்படுகிறான் என்று சிலர் பேசுகின்றனர். இது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் மிகவும் அடிக்கடி சுட்டிக்காண்பிக்கும் பகுதியாக உள்ளது. இருப்பினும் இதுவே ஆகாபுக்குத் தரப்பட்ட கடைசி வாய்ப்பு என்றும் அவர் இதை அனுகூலப்படுத்தத் தவறிவிட்டார் என்றும் 42ம் வசனம் தெளிவாக்குகிறது. ஆகாப் செய்த தவறு என்ன என்று காண்பதற்கு இந்த நிகழ்ச்சியைத் திரும்பவும் கவனியுங்கள்.

முதலாவதாக, அவர் தேவனுடைய சித்தம் என்னவாக இருந்தது என்று காண்பதற்குத் தேவனிடம் செல்லவில்லை. இது அவருடையதல்ல ஆனால் யெகோவாவினுடைய யுத்தமாகவே இருந்தது. இது ஆகாப் மற்றும் அவரது படைகளினால் அல்ல ஆனால் கர்த்தருடைய வல்லமை யால் வெற்றிகொள்ளப்பட்டிருந்தது. இந்த யுத்தத்தின் வழிநெடுகிலும் ஆகாப் கோழைத்தனமாகவே செயல்பட்டார்; வெற்றிக்கு அவர் எதையும் பங்களிக்கவில்லை. தேவன் விரும்பிய முடிவைத் தெரிந்துகொள்ளக் கர்த்தரைக் கலந்தாலோசித்தல் என்பதே அவர் குறைந்தபட்சமாகச் செய்திருக்கக் கூடியதாக இருந்தது (கவனிக்கவும் 1 இராஜாக்கள் 22:5, 8).

இரண்டாவதாக, அவர் கடந்தகாலத்தில் இருந்து எதையும் கற்றுக்கொள்ள வில்லை. ஆகாகை அழித்துப் போடும்படி சவுலுக்குக் கட்டளையிட்டது போல (1 சாமுவேல் 15), இஸ்ரவேலின் விரோதிகளினுடைய தலைவனை அழித்துப்போட வேண்டும் என்று கட்டளை இடுதல் தேவனுக்கு அசாதாரண மாக இருந்ததில்லை. சவுல் தமது சொந்த நோக்கங்களுக்காக[26] ஆகாகை உயிருடன் விட்டு வைத்தார் மற்றும் அதன் விளைவுகளை அனுபவித்தார்.

சவுலின் அடிச்சுவடை ஆகாப் பின்பற்றினார்.[27]

மூன்றாவதாக, ஆகாப் இஸ்ரவேலின் விரோதிகளுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தினார். அந்நிய உடன்படிக்கைகளைத் தேவனுடைய பிரமாணம் தடைசெய்தது.

நான்காவது, அவர் மற்றவர்களின் செலவில் பெருந்தன்மையாக இருந்தார். அவர் தேவனுடைய மக்களின் விரோதிகளைச் சுயாதீனமாகச் செல்ல - தேவனுடைய மக்களை மீண்டும் அழிக்க வருவதற்குச் சுயாதீனமாகச் செல்ல - அனுமதித்தார். 2 இராஜாக்கள் 6ம் அதிகாரத்தில் உள்ள சமாரியாவுக்கு எதிராகப் பெனாதாத் வழிநடத்திய அடுத்த முற்றுகை மற்றும் அதன் காரண மாக விளைந்த பயங்கரமான உபத்திரவம் ஆகியவற்றை நான் உங்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன் (வசனம் 24-31). தேவன் பெனாதாத்தை நடுநிலைப்படுத்துவதற்காக அவனை ஆகாபின் கைகளில் ஒப்புவித்தார், ஆனால் அவனைக் கனப்படுத்தி, அவனது காதுகளில் "சகோதரன்" என்ற வார்த்தை ஒலிக்க அவன் செல்லும்படி அனுமதித்தான்.

ஆகாபுக்கு மூன்றாவது - மற்றும் கடைசி - வாய்ப்பு தரப்பட்டிருந்தது. அவருக்குத் தேவன் இனியும் வாய்ப்பு எதையும் தரமாட்டார்.

விரைவிலேயே இன்னுமொரு தீர்க்கதரிசி[28] காட்சியில் தோன்றினார். தேவனுடைய அறிவுறுத்துதலின்கீழ் செயல்பட்ட தீர்க்கதரிசி, சாலையோரத்தில் ஆகாபுக்காகக் காத்திருந்தார். அரசர் பார்வையில் இந்தத் தீர்க்கதரிசியை அறிந்துகொள்வார் (வசனம் 41) என்பதால், தீர்க்கதரிசி தமது கண்களுக்கு மேல் கட்டு[29] ஒன்றைப் - போட்டுத் தம்மை மறைத்துக்கொண்டார், இது அவர் யுத்தத்தில் காயப்பட்டது போல் இருந்தது.[30] ஆகாப் கடந்து சென்றபோது தீர்க்கதரிசி பின்வருமாறு உரத்துக் கூவினார்:

> உமது அடியான் யுத்தத்தில் நின்றுபோது, ஒருவன் விலகி, என்னிடத்தில் ஒருவனைக் கொண்டுவந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாயிருக்கும், அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் என்றான். ஆனாலும் உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான் என்றான் (வசனங்கள் 39, 40அ).

ஆகாப் அதை அறிந்திருக்கவில்லை, ஆனால் அந்தத் தீர்க்கதரிசி, தாவீது அரசரிடத்தில் நாத்தான் கூறியதற்கு ஒப்பான ஒரு நாடகத்துவமான உவமை யைக் கூறினார்.[31] செல்லமாக வளர்க்கப்பட்ட ஆட்டுக்குட்டியைக் கொல்லுதல் பற்றிய நாத்தானின் கதையானது தாவீது உரியாவுக்குச் செய்த விஷயத்துடன் இணைவுபடுத்தப்பட்டது. 1 இராஜாக்கள் 20ல் ஒரு கைதியை விடுவித்தல் பற்றிய தீர்க்கதரிசியின் கதையானது, ஆகாப் பெனாதாத்துக்குச் செய்த விஷயத்துடன் இணைவுபடுத்தப்பட்டது.

அரசர்கள் அடிக்கடி நியாயாதிபதிகளாகச் செயல்படும்படி அழைக்கப்பட்டனர். இது ஆகாபைப் பொறுத்தமட்டில் ஒரு சுலமான வழக்காக இருந்தது. அவர் எதுவும் சிந்திக்காத நிலையிலேயே பதில் அளித்தார், "நீ சொன்ன தீர்ப்பின்படியே ஆகும்" (வசனம் 40ஆ). தீர்க்கதரிசியின் கதையின்படி, அவர் தப்பிக்கவிட்ட மனிதருக்குப் பதிலாக அவர் ஒரு வெள்ளித்தாலந்தைக் கொடுக்க

வேண்டும் அல்லது உயிர்விட வேண்டும். சாதாரணப் போர்வீரன் ஒருவன் ஒரு வெள்ளித்தாலந்தைக் கொண்டுவருதலுக்கு (இது சுமார் முப்பத்து நான்கு கிலோ வெள்ளியாக இருந்தது!) வழியெதுவும் இல்லை என்பதால், ஆகாபின் வார்த்தைகள் ஒரு மரண தண்டனை என்பதாக இருந்தது!

ஆகாபின் அரண்மனைக் காவலர் அந்த மனிதனைக் கைது செய்யச் சென்றிருப்பார்கள். தீர்க்கதரிசி தனது கண்களில் மூடியிருந்த துணியை அகற்றினார். அந்த மனிதர் தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்தார் என்று அரசர் கண்டபோது, அவர் திகைப்படைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை (வசனம் 41). இந்த கண்ணாமூச்சி விளையாட்டின் அர்த்தம் என்னவாக இருந்தது? ஆகாப் நீண்ட நேரம் சந்தேகத்தில் விடப்பட்டிருக்கவில்லை. தீர்க்கதரிசி, "சங்காரத்திற்கு நான் நியமித்த மனுனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று கூறினார் (வசனம் 42).

ஆகாப் "இங்கும் அங்கும் அலுவலாயிருந்ததால்" - தேவனுடைய சித்தத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க இயலாத அளவுக்குத் தம்மைப்பற்றியும் அந்த சூழ்நிலையில் தாம் எதை ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும் என்பதைப் பற்றியும் நினைப்பதில் மும்முரமாக இருந்ததால் இதைச் செய்திருந்தார் என்பதே இங்கு மறைமுகமான கருத்தாக உள்ளது. "இங்கும் அங்கும் அலுவலாயிருத்தல்" - அது என்ன ஒரு சிந்தனையைத் தூண்டும் சொற்றொடராக உள்ளது! நம்மில் பெரும்பான்மையானவர்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்து உண்மையில் முக்கியமான விஷயங்கள் நம்மைவிட்டுத் தவறிப் போகும்படி விட்டுவிடுகிறோம் என்பது உண்மையல்லவா? யாரோ ஒருவர், "ஆவிக்குரிய வகையில் T.B. (Too Busy - அதாவது மிகவும் பணிமும்முரம்) என்பதே நமது நாட்களில் மிகவும் பயங்கரமான ஆவிக்குரிய வியாதியாக உள்ளது" என்று ஞானமாகக் கூறினார்: "நாம் மிகவும் பணிமும்முரமாக இருக்கிறோம்."

ஆகாபின் சிந்தையானது அவர் செய்திருக்கவேண்டிய விஷயத்தில் இல்லாதிருந்தபடியால் அவர் தமக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பையும் இழந்துபோனார். இவ்வரலாறு பின்வருமாறு முடிகிறது: "அதினால் இஸ்ரவேலின் ராஜா சலிப்பும் விசனமுமாய்த் [ஒரு தேரையைப் போல உப்பிப் பெருத்தவனாக] தன் வீட்டிற்குப்போகப் புறப்பட்டுச் சமாரியாவுக்கு வந்தான்" (வசனம் 43).

## முடிவுரை

ஆகாப் 20ஆம் அதிகாரத்திற்கு முன்பு வரையில், மனந்திரும்பித் தேவனிடமாய்த் திரும்புவதற்கு வாய்ப்பிற்குப் பின் வாய்ப்பாகப் பெற்றிருந்தார். ஒரு பேஸ்பால் விளையாட்டில் அனுமதிக்கப்படுகிற மூன்று அடிகளைப் போன்று, அவருக்கு மூன்று கடைசி வாய்ப்புக்கள் தரப்பட்டன. அது அடி ஒன்று, அடி இரண்டு, அடி மூன்று என்றிருந்தது, மற்றும் ஆகாப் வெளியேறினார்!

நமது தேவன் இரக்கம் நிறைந்த தேவனாக இருக்கிறார். இரக்கமும் கிருபையும் உள்ள தேவன் மாத்திரமே ஆகாபுக்கு இன்னும் ஒரு வாய்ப்பைக் கொடுத்திருப்பார். இருப்பினும், தேவனுடைய பொறுமை எல்லை மீறும் வேளை வருகிறது.[32] பின்பு, தகுதியற்ற அடிமை புறம்பே தள்ளப்பட வேண்டியவனாக இருந்தது போன்று (மத்தேயு 25:30) "நீங்கள் வெளியேறுகிறீர்கள்."

*தேவன் ஆகாபின் வாழ்வில் கிரியை செய்தது போன்றே நமது வாழ்விலும் நிச்சயமாகக் கிரியை செய்கிறார். அவர் கர்த்தராக இருக்கிறார் என்பதை நமது மனதில் பதியச் செய்தல் என்பதே எப்போதும் அவரது நோக்கமாக இருந்துள்ளது! நான் உங்களிடம் பின்வருமாறு கெஞ்ச அனுமதியுங்கள்: தேவனுடைய கிருபையை ஒருக்காலும் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்; அது உங்களுக்கு உரியது என்பது போன்று எடுத்துக்கொள்ளாதீர்கள். மாறாக அதை அனுகூலப் படுத்திக் கொள்ளுங்கள்.*

*தேவன் நாம் ஒப்புக்கொள்வதற்கும் கீழ்ப்படிதலில் அவரிடம் வருவதற்கும் அவர் நமக்கு வாய்ப்பிற்குப் பின் வாய்ப்பாகப் பல வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கிறார் - ஆனால் ஒரு காலகட்டத்தில் அவரது பொறுமை நலிவடைகிறது. அவருக்குக் கீழ்ப்படிய நீங்கள் பெற்றுள்ள வாய்ப்புகள் எத்தனை? எத்தனை வாய்ப்புகளை நீங்கள் உங்களைவிட்டுக் கடந்து செல்ல அனுமதித்தீர்கள்? ஒன்றுக்குப் பின் ஒன்றாக நீங்கள் அந்த வாய்ப்புக்களைப் புறக்கணித்தால், இது உங்கள் "கடைசி வாய்ப்பாக" இருக்கக் கூடுமா?*

---

*குறிப்புகள்*

*[1]"பெனாதாத்" என்பது அர்மீனியாவின் (சீரியாவின்) பல அரசர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு பரம்பரைப் பெயராக இருந்தது. சிலர் இவரை பெனாதாத் I என்று நினைக்கின்றனர். [2]இவர்கள் அனேகமாக, பெனாதாத்தின் கீழாக இருந்த சிற்றரசர்களாக, சீரியாவினால் கட்டுப்பாடு செய்யப்பட்ட எல்லைப்பகுதிகளில் ஆளுகை செய்தவர்களாக இருக்கலாம். [3]இவர், முன்பு முற்றுகையிட்ட அதே பெனாதாத் என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். [4]ஆகாப் இதை அர்த்தப்படுத்தி இருக்கமாட்டார், அதாவது ஆகாப் "சுவாச இடைவெளியைப்" பெறுதல் என்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டார், அதாவது ஆகாப், பெனாதாத் விரும்பியதை மாத்திரம் அவனுக்கு அனுப்பத் திட்டமிட்டார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது உண்மையாக இருந்தபோதிலும், ஆகாப் அந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டதன்மூலம் தனது குணத்தைக் காண்பித்தார். [5]இந்த அதிகாரம் ஆகாபை ஒரு நல்ல வெளிச்சத்தில் காண்பிக்கிறது என்று சிலர் நம்புகின்றனர். இந்த எழுத்தாளர் அந்த "வெளிச்சத்தை" கண்டுபிடித்தலைக் கடினமானதாகக் காணுகிறார். [6]பெனாதாத் வார்த்தைகளின் அர்த்தத்தில் சாத்தியக்கூறுள்ள வகையில் மற்ற மாறு பாடுகள் உள்ளன, ஆனால் இது பொதுவான கருத்தைக் கொடுக்கிறது. [7]"ஆயுதம்" என்பது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது, ஆனால் சந்தர்ப்பப் பொருளின் வெளிச்சத்தில் இது ஒரு நியாயமான யூகமாகக் காணப்படுகிறது. [8]பொழிப்புரை வேதாகமம் ஆகாப் பயன்படுத்திய பழமொழிக்கு இதைப் பதிலியாகக் கொண்டுள்ளது. [9]இவ்விடத்தில் உள்ள எபிரெய வார்த்தையானது கூடாரங்களின் பண்டிகைக்கு இஸ்ரவேல் மக்களால் கட்டப்பட்ட கூடாரங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே எபிரெய வார்த்தையாக உள்ளது. கடந்த காலத்தில் அமெரிக்க நாட்டில் துடைப்பக் குச்சிகள் மற்றும் கிளைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட கூடாரங்கள் இருந்தன, அவை "brush arbors" என்று அழைக்கப்பட்டன. [10]சாம் ஹீஸ்டன் என்பவர் சான் ஜேஸின்த்தோ என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் சான்ட்டா ஆனாவைத் தோற்கடிக்க, இந்த யுக்தியைப் பயன்படுத்தினார் என்று பர்ட்டன் காஃப்மேன் 1 இராஜாக்கள் புத்தகத்தின் மீதான தமது விளக்கவுரையில் குறிப்பிடுகிறார்.*

[11]இந்த மது அருந்துதலின் அபாயங்கள் மீதான பாடம் ஒன்று இங்குள்ளது. [12]இந்தச் சொற்றொடர் 232 பேர்களை மாத்திரம் குறிக்கிறதா அல்லது 7000 பேர்களையும் குறிக்கிறதா என்பது பற்றிக் கேள்வி உள்ளது. [13]இது அனேகமாக, அவனது சொந்த மெய்க்காப்பாளனாக இருந்திருக்கலாம். [14]இவர் அனேகமாக, 13ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தீர்க்கதரிசியாக இருக்கலாம். [15]இது ஜீவனுள்ள வேதாகமத்தின் பொழிப்புரையாகும். [16]முப்பத்து இரண்டு அரசர்களுக்குப் பதிலாக சேனாதிபதிகளை ஏற்படுத்துதல் என்பது பெனாதாத்தின் ஆலோசகர்களால் தரப்பட்ட ஆலோசனையின் இன்னொரு அம்சமாக இருந்தது. முப்பத்தி இரண்டு அரசர்களும் முந்திய யுத்தத்தில் பீதியடைந்திருக்கச் சாத்தியக்கூறுள்ளது. அரசராக இருத்தல் என்பது ஒருவரை யுத்தத்தில் வழிநடத்தத் தகுதியானவராக்கி விடுவதில்லை. [17]வசனப் பகுதியானது, அவர்கள் "யுத்தம்பண்ண ஆப்பெக்கு வரையில் சென்றனர்" என்று கூறுகிறது. வேதவசனங்களில் ஆப்பெக்கு என்ற பெயரில் பல இடங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன, இதன் மிகச் சரியான அமைவிடம்பற்றி நாம் உறுதியாக எதையும் அறிய முடிவதில்லை. இருப்பினும் 23 மற்றும் 25ம் வசனங்களில் அடிப்படையில் நாம், இந்த நகரம் ஒரு சமவெளியில் இருந்தது என்று நிச்சயமாய் கூறலாம். [18]இது தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவரை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட இரண்டாவது சொற்றொடராக உள்ளது. சீரியர்களுக்கு எதிரான முந்திய யுத்தத்தின் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட ஒருவரில் இருந்து இவர் வேறுபட்ட தீர்க்கதரியாக இருப்பதாகக் காணப்படுகிறது. [19]கல்வியாளர்கள், 29 மற்றும் 30ம் வசனங்களில் பயன்படுத்தப்பட்ட உருவங்கள் உண்மையானவையா அல்லது அடையாளத்துவமானவைகளா என்பது பற்றி விவாதிக்கின்றனர். இருப்பினும், "27,000" என்பது தன்னை அடையாளத்துவத்திற்கு ஒப்புவிக்கத் தயாராக இருப்பது இல்லை. இந்த எண்ணிக்கை உண்மையானவைகள் என்று நினைக்காதிருக்கக் காரணம் எதுவும் இல்லை. சீரியருடைய யுத்தங்கள் பற்றிய உலகப்பிரகாரமான பதிவேடுகள், களத்தில் இருந்த சேனைகள் சிலவேளைகளில் அந்த அளவோ அல்லது அதைவிடப் பெரியதாகவோ இருந்தன என்று சுட்டிக்காண்பிக்கின்றன. [20]இந்தத் தந்திரம் வரலாற்றில் பல முறைகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது; மூன்றாம் எட்வர்டு என்பவர் காலாய்ஸ் என்ற நகரத்தை முற்றுகையிட்ட பின்பு, அந்த நகரத்தின் குடிகள் இதைச் செய்தனர்.

[21]Victor Lloyd. [22]Coffman, *Commentary on 1 Kings, 268.* [23]இது அவன் காத்துக்கொள்ளாத ஒரு வாக்குத்தத்தமாகும் (1 இராஜாக்கள் 22:3). [24]தமஸ்குவில் "வீதிகளை ஏற்படுத்திக்கொள்ளுதல்" என்பதற்கு இதுவே அனேகமாக அர்த்தமாக இருக்கலாம். RSV வேதாகமத்தில், "தமஸ்குவில் நீர் கடைகளை உமக்கு நிலைநாட்டிக்கொள்ளலாம்" என்றுள்ளது. [25]ஒரு விஷயம் நிச்சயமானதாக உள்ளது: பெனாதாத், "சகோதரனாகிய" ஆகாபின்மீது முழுமையான அன்புடன் அங்கிருந்து செல்லவில்லை (1 இராஜாக்கள் 22:31). [26]ஒருவேளை சவுல் தமது சொந்த வீரத்தைக் காண்பிப்பதற்காக இவ்வாறு செய்திருக்கலாம். [27]சவுல் ஆகாகை உயிருடன் விட்டு வைத்ததற்கும், ஆகாப் பெனாதாத்தை உயிருடன் விட்டு வைத்ததற்கும் இடையில் பல இணைவுகள் உள்ளன. [28]"தீர்க்கதரிசி" என்பதற்கான மூன்றாவது சொற்றொடர் ஒன்று வரலாற்றின் இந்தப் பாகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "... யின் புத்திரன்" என்பது "இயல்பில் பங்கேற்றல்" என்பதைச் சுட்டிக் காண்பிக்கும் எபிரெயச் சொற்றொடராக்கமாக உள்ளது. "தீர்க்கதரிசியின் புத்திரன்" என்பது தீர்க்கதரிசியைப் பற்றிக்கூறும் மரபுசார் வழியாக உள்ளது. யோசிப்பஸ் என்பவரும் மற்றவர்களும், இது இரு அதிகாரங்களுக்குப் பின்பு நாம் சந்திக்க இருக்கும் மிகாயா தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும்

என்று நம்புகின்றனர் (1 இராஜாக்கள் 22:8ff.). [29]எபிரெய வசனத்தில் "கண்களின்மீது மறைப்பு ஒன்றை" கொண்டிருந்தார் என்றுள்ளது. KJV வேதாகமத்தில் வேஷம் மாறுவதற்கு "சாம்பலை" போட்டுக்கொண்டார் என்றுள்ளது [தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளது]. கட்டு என்பது ஏறக்குறைய வேஷம் மாறுதலாகவே உள்ளது. [30]அந்தத் தீர்க்கதரிசி காயப்பட்டிருந்தார், ஆனால் யுத்தத்தில் அல்ல. 35 முதல் 37 வரையுள்ள வசனங்களில் இந்தத் தீர்க்கதரிசி தம்மை அடிக்கும்படி மற்றவர்களிடத்தில் கேட்டுக் கொண்ட தெளிவான வரலாற்றை நாம் கொண்டுள்ளோம்.

[31]2 சாமுவேல் 12. [32]அடுத்த பாடத்தில் காணவும்.

## காட்சி - உதவி குறிப்புகள்

மூன்று பொருள்களை (கற்கள் அல்லது எதையாவது) எடுத்து எல்லாரும் காணக்கூடிய இடத்தில் வைத்துவிடுங்கள். இந்தப் பொருள்கள் ஆகாபுக்குக் கிடைத்த கடைசி மூன்று வாய்ப்புக்களைக் குறிக்கின்றன. இவைகள் ஆகாபுக்குக் கிடைத்த *கடைசி* மூன்று வாய்ப்புகள் என்பதை வலியுறுத்துங்கள் பின்பு வேளைக்கு ஒன்றாக அவற்றைப் புறம்பே எடுத்துப் போட்டு விடுங்கள். "மூன்று அடிகள் மற்றும் நீங்கள் வெளியேறுவீர்கள்" என்ற ஒப்புவமை உங்களுக்குப் பிடித்தமானது என்றால், நீங்கள் மூன்று பேஸ்பந்துகளைப் பயன்படுத்த முடியும். உங்கள் சொந்த அனுபவத்தில் இருந்தோ அல்லது நீங்கள் கேள்விப்பட்டவற்றில் இருந்தோ பேஸ்பால் பற்றி அதிகம் நாடகத்துவமான விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்த முடியும்.

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. இன்னும் ஒரே ஒரு வாய்ப்புத் தான் உள்ளது என்பது பற்றி நினைத்தல் அச்சமூட்டுவதாக உள்ளது! நமது பாடம், "ஆகாபுக்குக் கடைசி வாய்ப்பு" என்பதைப் பற்றியதாக உள்ளது.

1. எலியா ஏற்கனவே ஆகாபுடன் [போராடுதலை] விட்டிருந்தார் (அதிகாரம் 19); அவர் ஆகாபுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.
2. தேவன் ஆகாபுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தார் - உண்மையில் அது ஒரு வாய்ப்பாக அல்ல, ஆனால் மூன்று "கடைசி வாய்ப்புகளாக" இருந்தன! என்ன ஒரு ஆச்சரியமான கிருபை!

B. 1 இராஜாக்கள் 20ல் நாம், சீரியர்களின்மீது ஆகாபும் இஸ்ரவேல் மக்களும் வெற்றியடைவதற்காகத் தேவன் கிரியை செய்வதைக் காண்கிறோம்.

1. தேவன் தம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களைக் காப்பதற்காகவே இதைச் செய்தார் என்பதில் சந்தேகம் இல்லை.
2. 13 மற்றும் 28ம் வசனங்கள், தேவன் தமது சிந்தையில் இன்னொரு நோக்கத்தையும் கொண்டிருந்தார் என்று

*நமக்குக் கூறுகின்றன: கடின இருதயம் கொண்ட ஆகாபையும் அவரைப் பின்பற்றுபவர்களையும், தாம் ஒருவரே உண்மையுள்ள தேவனாக இருக்கிறார் என்று நம்பி இணங்கச் செய்வதற்காக!*

I. *ஆகாபுக்கு முதல் வாய்ப்பு (20:1-21)*
   A. *சீரியாவின் அரசனான பெனாதாத், சமாரியா நகரத்தை அழிக்க முனைப்புக் கொண்டிருந்தான் (வசனங்கள் 1-12).*
      1. *சமாரியாவில் முற்றுகை என்பது அனேகமாக நீண்டதாக இருந்தது; ஆகாப் ஏறக்குறைய எந்த நிபந்தனைகளுக்கும் தயாராக இருந்தார் என்பது உறுதி (2 இராஜாக்கள் 6:24ff. வசனங்களில் பெனாதாத்தினால் இடப்பட்ட பிந்திய முற்றுகை ஒன்றின் கடுமையைக் கவனியுங்கள்).*
      2. *பெனாதாத் தனது முதல் நிபந்தனைகளை உரைத்தான்: "உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள்" (வசனம் 3). ஆகாப் ஒப்புக்கொண்டார் (வசனம் 4). ஒரு அரசர் தமது அந்தப் புறத்தைத் துறந்துவிடுதல் என்பது அவர் தமது அரியணையையும் தமது சுயமரியாதையையும் துறந்துவிடுதல் என்பதாக இருந்தது.*
      3. *பெனாதாத் தனது நிபந்தனைகளை மாற்றியபோது, ஆகாப் எதிர்த்து நிற்க வேண்டும் என்று அவரது ஆலோசகர்கள் அவரை வற்புறுத்தினர். ஆகாப் நிபந்தனைகளை மறத்தபோது, நகரத்தை அழிக்கப் பெனாதாத் தயாரானான்.*
   B. *தேவனே கர்த்தராக இருந்தார் என்பதை ஆகாப் அறியக்கூடும்படிக்குத் தேவன் அடியெடுத்து வைத்தார் (காண்க வசனம் 13). இது இந்த அதிகாரத்தில் ஆகாப் தேவனை ஒப்புக்கொண்டு மனந்திரும்ப அவருக்குக் கிடைத்த முதல் வாய்ப்பாக இருந்தது.*
      1. *எலியாவைத் தவிர இன்னொரு தீர்க்கதரிசி இஸ்ரவேலில் இருந்தார் (வசனங்கள் 13, 22; மேலும் காண்க - வசனங்கள் 28, 35). கர்மேல் மலையின்மீது எலியாவின் வீரமான செய்கையினால், ஒளிந்திருந்த தீர்க்கதரிசி தைரியம் பெற்றிருக்கலாம்.*
      2. *தாக்குதலானது 232 இளைஞர்களால் வழிநடத்தப்பட்டது (அனேகமாக இவர்கள் இஸ்ரவேலின் உள்ளூர் அரசர்களுடைய வேலைக்காரர்களாக, யுத்தத்திற்குப் பழக்கப்படாதவர்களாக இருந்திருக்கலாம்), இவர்களைத் தொடர்ந்து இஸ்ரவேல் போர்வீரர்கள் 7,000 பேர் சென்றனர்.*
      3. *பெனாதாத் குடித்து வெறித்திருக்கையில் இட்ட கட்டளை ஒன்றினால், அவனது படைகள் விரைவாகக் கொல்லப் பட்டன.*
      4. *இந்தத் துடைத்தொழிக்கும் செயலுக்காக ஆகாப் நகரத்தில்*

இருந்து வந்திருந்தார் (வசனம் 21). இருப்பினும் அவர், யெகோவாவைக் கர்த்தர் என்று ஒப்புக்கொள்ளவில்லை. முதலாம் வாய்ப்பு கடந்து போயிருந்தது.

II. ஆகாபுக்கு இரண்டாவது வாய்ப்பு (20:22-30)

A. ஒரு ஆண்டிற்குப் பின்பு (தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப் பட்டபடியே) சீரியர்கள் இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தம் செய்யத் திரும்பி வந்தனர் (வசனங்கள் 22-27).

1. இம்முறை, சமாரியாவைச் சுற்றிலும் இருந்த மலைப் பகுதி யின்மீது யுத்தம் செய்வதற்கு மாறாக, சமவெளிகளில் யுத்தம் செய்தலே சீரியர்களின் யுக்தியாக இருந்தது.

2. சீரியர்களின் படைகள் தேசத்தை நிரப்பியிருந்தன, அதே வேளையில் இஸ்ரவேலின் படைகள் "இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போல்" காணப்பட்டன (வசனம் 22). அது இன்னுமொரு வெற்றிபெற இயலாத சூழ்நிலையாகக் காணப்பட்டது.

B. தேவன், தாம் இந்த அண்டத்தின் தேவன் என்று காண்பிக்கவும் தாமே உண்மையான தேவன் என்று ஆகாபுக்குக் காண்பிக்கவும் மீண்டும் இடையிட்டார் (வசனம் 28). இது ஆகாபுக்குக் கிடைத்த இரண்டாவது வாய்ப்பாக இருந்தது.

1. கண்காணக்கூடிய வெற்றியொன்று தொடர்ந்தது (வசனங்கள் 29, 30). பெனாதாத்தின் படை அழிக்கப்பட்டது, பிடிபட்ட ஒரு நகரத்தில் ஒரு சிறு அறையினுள் அவன் பதுங்கியிருந்தான். அவனைத் தேவன் ஆகாபின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.

2. மீண்டுமாக, ஆகாப் இந்த மாபெரும் வெற்றியின் ஆதாரமூலத்தை ஒப்புக்கொண்டு இருந்ததற்காக குறிப்பு எதுவும் இல்லை. இரண்டாவது வாய்ப்பு கடந்து சென்றது.

III. ஆகாபுக்குக் கிடைத்த மூன்றாவது வாய்ப்பு (20:30-43)

A. பெனாதாத்தைக் குறித்து என்ன செய்வது என்பது பற்றிக் கர்த்தரிடம் ஆலோசனை கேட்டு அதற்கு கீழ்ப்படிதலே ஆகாபுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாக இருந்தது. கர்த்தருடைய வார்த்தை என்ன என்று காண நிற்பதற்குப் பதிலாக (காண்க 1 இராஜாக்கள் 22:4), ஆகாப் பெனாதாத்தை கவனத்தினால் மூடி அவனை விடுவித்தான் (வசனங்கள் 30-34).

B. ஆகாப் இனி வாய்ப்புக்களைப் பெற்றிருக்க மாட்டர் (வசனங்கள் 35-43)!

1. கைதி ஒருவனை தப்பிச்செல்ல விட்டது பற்றிய கதை ஒன்றை ஒரு தீர்க்கதரிசி கூறினார். (இந்த உவமையானது 2 சாமுவேல் 12:1-4ல் தாவீது அரசரிடத்தில் நாத்தானால் கூறப்பட்ட ஒரு உவமையைப் போன்றதாக உள்ளது.) பின்பு அந்தத் தீர்க்கதரிசி, பெனாதாத்தை விடுவித்த ஆகாபைப் பற்றியே தாம் பேசியதாக வெளிப்படுத்தினார். ஆகாப் பெனாதாத்தின் உயிரைப் பிழைக்கவிட்டபடியால், அவரது உயிர் எடுக்கப்படும் (வசனம் 42).

*2. ஆகாப் தமது கடைசி வாய்ப்பையும் இழந்துபோனார்!*

*முடிவுரை*

A. *தேவன் ஆகாபின் வாழ்வில் கிரியை செய்தது போலவே நமது வாழ்விலும் கிரியை செய்கிறார் என்பது நிச்சயம். அவர் கர்த்தராக இருக்கிறார் என்பதை நமது மனதில் பதியச் செய்தலே எப்போதும் அவரது நோக்கமாக உள்ளது!*

B. *தேவனை நாம் ஒப்புக்கொள்வதற்கும் கீழ்ப்படிதலுடன் அவரிடத்தில் வருவதற்கும் அவர் நமக்கு, வாய்ப்பிற்குப் பின் வாய்ப்பாகப் பல வாய்ப்புகளைக் கொடுத்துள்ளார். ஒரு காலகட்டத்தில் அவரது பொறுமை நலிவடைகிறது. அவருக்குக் கீழ்ப்படிய நீங்கள் பெற்றுக் கொண்ட வாய்ப்புகள் எத்தனை? அந்த வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் நீங்கள் புறக்கணித்திருந்தால், இது உங்கள் "கடைசி வாய்ப்பாக" இருக்க முடியுமா?*